முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 17.11.2025, அ.வ.எண். 307/2016  வா.சா.1. முத்துவேல், த/பெ. கிருஷ்ணசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  2 முதல்  பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்குச்சொத்தின் புலஎண் என்ன என்றால் 429/25 ஆகும். மேற்படி புல எண் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்பா பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக சொத்து ஆகும்,. அது போன்று எனது அப்பாவிற்குபாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல,

2) தாவா சொத்து எங்களது சுவாதீனத்தில் இருப்பது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எங்களது பெயரில் பட்டா வழங்கும்படி பரிகாரம் கேட்டுள்ளேன். பட்டா வழங்கும் படி தாசில்தாரிடமோ அல்லது கிராம நிர்வாக அலுவலரிடமோ மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது. எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.எ அவ்வாறு நான் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

3) 4 ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என் பெயருக்கு மின் இணைப்பு மாற்றி தரவேண்டும் என்று கேட்டுள்ளேன். மின்சார வாரியத்தில் எனக்கு மின் இணைப்பு கேட்டு மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மின் இணைப்பு கேட்டு மனு எதுவும் கொடுக்கவில்லை என்பதால் மின் இணைப்பு குறித்து நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சபரிநாதன் எந்த ஆண்டு வீடு கட்டினார் என்றால் வீடு எதுவும் கட்டவில்லை. வா சா ஆ 1 ஆவணமான 26.03.1943 ம் வருடத்தில் குறிப்பிட்டுள்ள ராமசாமி என்ற பெயரில் பல நபர்கள் எங்கள் ஊரில் உள்ளார்கள் என்றால் சரிதான்.

4) எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கமுடியாது என்றும் இந்த பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி